செ.வெ.எண்:48 நாள்:19.01.2019

**நாகப்பட்டினம் மாவட்டம்**

**கீழையூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில் சுமார். ரூ.2 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக புதியக் கட்டிடம் கட்டுமானப் பணிகளுக்கான பூமிபூஜையினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் தொடங்கி வைத்தார்.**

நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூர் ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில் சுமார் ரூ.2 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலக புதியக் கட்டிடம் கட்டுமானப் பணிகளுக்கான பூமிபூஜையினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் இன்று (19.01.2019) தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.சீ.சுரேஷ்குமார்,இ.ஆ.ப அவர்கள் தலைமை வகித்தார்.

புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளுக்கான பூமிபூஜையினைத் தொடங்கி வைத்து மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது,

‘‘மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழிகாட்டுதலோடு தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. நாகப்பட்டினம் மாவட்டம் கீழையூரில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சிகள் துறை சார்பில் ரூ.2 கோடியே 95 லட்சம் மதிப்பீட்டில் ஊராட்சி ஒன்றிய அலுவலக் கட்டிடம் கட்டப்படவுள்ளது. இக்கட்டிடத்தில் தரை தளம் 8950 சதுர அடி பரப்பளவிலும், முதல் தளம் 8237 சதுர அடி பரப்பளவிலும் என மொத்தம் 17187 சதுர அடி பரப்பளவில் கட்டப்படவுள்ளது. தரைதளத்தில் வரவேற்பறை, வட்டார வளா்ச்சி அலுவலா் அறை, கணிணி அறை, பதிவு அறை, அலுவலகம் மற்றும் இருபாலருக்கான கழிப்பறைகளும், முதல் தளத்தில் கூட்ட அரங்கம், அலுவலகம் மற்றும் கழிவறைகளும் அமையவுள்ளது. இந்த புதிய கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளுக்கான பூமிபூஜை இன்றைய தினம்(19.01.2019) தொடங்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, இந்த ஆண்டே புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலக் கட்டிடம் பயன்பாட்டுக்கு கொண்டு வர நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு மாநிலம் முழுவதும் உட்கட்டமைப்பினை மேம்படுத்திட தமிழக அரசு பல நல்ல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.’’ என தெரிவித்தார்.

தொடர்ந்து நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம், பண்ணத்தெரு ஊராட்சியில் கஜா புயலின் போது உயிரிழந்த திருமதி.வள்ளி கபெ.தங்கவேல் என்பவரது வாரிசுதாரர்கள் 3 நபர்களுக்கு தலா ரூ.3 லட்சத்து 33 ஆயிரத்து 333 வீதம் மொத்தம் ரூ.10 லட்சம் நிவாரணத் தொகைக்கான காசோலையினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் திரு.ஓ.எஸ்.மணியன் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.சங்கர், சிக்கல் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.தங்க.கதிரவன், கீழையூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கித் தலைவர் திரு.வேதையன், செய்தி மக்கள் தொடா்பு அலுவலா் திரு.மீ.செல்வகுமார், வட்டாட்சியர் திருமதி.ஸ்ரீதேவி வட்டார வளர்ச்சி அலுவலா்கள் திரு.பாஸ்கரன், திருமதி.மீனா மற்றும் அரசு அலுவலா்கள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடா்பு அலுவலகம், நாகப்பட்டினம்**